**தலைப்பு 227 – ஆட்களைப ்பதிவு செய்யும் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் 3.1.2 அட்டவணையில் அடங்கிய வருமானக் குறியீடுகள் தொடர்பான வருமானக் கணக்கும் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் தொடர்பாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வு நோக்கெல்லை

-----------------------------------------------

தலைப்பு 227 – ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 அக்தோபர் 25 ஆந் திகதி திணைக்கள ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

----------------------------------------------------

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள

கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப் பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128(1) கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
| --- | --- | --- | --- |
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கை நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளின் நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்திருத்தல். | 1. செயல்நடவடிக்கைத் திட்டம் சரியாக தயாரிக்கப்பட்டிருக்காமை<br>2. பாதீட்டு மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்படாமை. | 2.1<br>2.5 |
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக் கட்டுபாட்டிற்கும் கணக்கீட்டு முறைக்குமுள்ள ஒழுங்குகள் வெற்றிகரமாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசிற்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை ஒழுங்காக உறுதிப்படுத்துவற்கும் அவற்றை முறையாகவும் முழுமையாகவும் உடனடியாக சேகரிப்பதற்கும் கிடைக்கப்பெறும் பணத்தை கணக்கு வைப்பதற்கும் அரசிற்காக பொறுப்புக்களில் கட்டுப்பாடுகளுக்காக அதிகாரமளிப்பதற்கும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குதல் கண்காணிப்பு மற்றும் பரீட்சிப்பதற்கும் அந்த அரசின் நிதியத்திலிருந்து அதற்காக உடனடியாகவும் தாமதமின்றியும் சரியாக கொடுப்பனவு செய்வதற்கும் அதற்கு | பெறுகை செயற்பாடுகளை செயற்படுத்துவதில் உள்ள குறைபாடுகள் | 2.4 (ஆ) |

| | | | |
|---|---|---|---|
| | போதியளவு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றதெனவும் | | |
| 128(1)(இ) | நிதிப் பிரமாணம் மற்றும் அரசாங்கத்தின் ஏனைய துணை அறிவுறுத்தல்களையும் தனது திணைக்களம் பின்பற்றப்படுவதாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றதெனவும் | இணக்கமின்மை | 2.8 |
| 128(1)(ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது திறைசேரியால் கேட்கப்படுகின்ற தகவல்கள், கூற்றுக்கள் சரியான காலநேரத்தில் சமர்பிக்கப்படுவதாகவும் | பாதீட்டு மதிப்பீடு நடைமுறை சாத்திமாக தயாரித்திருக்காமை. | 2.5 |
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள வருமதிகளை அறவிடுவதற்கு விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதெனவும் அத்தகைய வேலைகள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நிலுவைப் பணத்தை அறவிடுவதனை துரிதப்படுத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக கீழ்மட்டத்தினரிடமிருந்து மூன்று மாதத்திற்கு ஒருமுறை அல்லது ஏனைய வகையில் ஒழுங்குபடுத்துத்தப்பட்டதன் பிரகாரம் தமக்கு அறிவிக்கப்படுகின்றதெனவும் | 1. அரசாங்க உத்தியோகத்தர் களுக்காக முற்பணக் கணக்கில் நிலுவை கடன் மீதியை அறவீடு செய்தல்<br>2. வருமானக் கணக்குகளில் குறைபாடுகள் | 2.7<br><br>2.6 |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

---

### 2.1 செயலாற்றல்

---

**திட்டமிடல்**

---

2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அதன்

பிரகாரம் மீளாய்வாண்டின் போது திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய 08 பிரதான செய்பணிகள் காணப்பட்டதுடன் எதிர்பார்த்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதற்கான தயாரிக்கப்பட்டிருக்கும் செயல் நடவடிக்கை திட்டத்தில் வருமானம் சேகரித்தல் செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் வருடாந்த செயற்பாடுகளுக்காக கட்டுநிதி தேவைகளை திட்டம் உட்படுத்தியிருக்கவில்லை.

## 2.2 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள்

-----------------------------------------------------------------

**வருடாந்த பாதீட்டு எல்லையை மிகைத்து பொறுப்புகளுக்கு அனுகுதல்**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

(அ) 2017 ஏப்ரல் 27 திகதி 255/2017 இற்கான அரச நிதிச் சுற்றறிக்கையின் 02(ஆ) பந்தியுடன் இனங்காமல் இரண்டு செலவு விடயங்களுக்காக ஒதுக்கியிருந்த ரூபா 70.81 மில்லியன் ஏற்பாடுகளை விஞ்சி ரூபா 1.16 மில்லியனுக்கான பொறுப்புகளை ஏற்படுத்தி கணக்குகளில் காட்டியிருக்கவில்லை.

(ஆ) நிதி பிரமாணம் 94(2) இன் பிரகாரம் வருடாந்தம் மீண்டெழும் வழங்கள் மற்றும் சேவைகளுக்கான திணைக்களமொன்றிற்கு தொடர்ந்து வரும் ஆண்டின் போது தீர்பதற்கு நேரிடக்கூடிய பொறுப்பு ஒன்றிற்கு கடப்பட முடியும். எனினும் அவ்வாறு கொடுப்பனவு செய்வதற்கு நேரிடும் தொகை கடந்த மூன்று ஆண்டுகளில் ஏற்பாடு செய்யப்பட்ட தொகையின் சராசரியில் 50 சதவீதத்தை அதிகரிக்க கூடாது என குறிப்பிட்டிருந்த போதிலும் 226-1-2-1201 செலவு விடயத்தில் அந்த 50 சதவீதத்தை மிகைத்து பொறுப்புகளை அனுகியிருந்தது.

## 2.3 தீர்த்திருக்காத கணக்காய்வு பந்திகள்

---------------------------------------------------------------------

திணைக்களத்திற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் அடங்கியிருந்த கணக்காய்வு பந்திகளில் சுட்டிக் காட்டி குறைபாடுகள் தொடர்பாக திணைக்களத்தினால் சரி செய்திருக்காத பந்திகளுடன் தொடர்பு கீழ் காண்பிக்கப்படுகின்றன

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| ஆண்டு | பந்தி இலக்கம் | |
| 2016 | 3.7 (அ) | ஆளுக்குரிய தரவு பெயர் பட்டியல் வரிசை ஒன்று தயாரித்திருக்கவில்லை. |
| 2016 | 3.7(ஈ)(i),(ii),(iii) | ஒரே நபருக்கு இரண்டு அடையாள அட்டைகள் வீதம் வழங்கியிருந்த சந்தர்பங்களை மற்றும் ஒரே இலக்கம் இரண்டு ஆட்களுக்கு வழங்கியிருத்தல் |
| 2016 | 3.8 | காட்கள் வீணாதல் |

## 2.4 முகாமைத்துவ பலவீனங்கள்

தெரிவு கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 ஆண்டின் போது சட்ட பிரிவுக்கு சிக்கல் தன்மையுள்ள 5092 விண்ணப்பங்கள் கிடைத்திருந்ததுடன் அவற்றில் வேலை பூரத்தி செய்யப்பட்ட 3676 தொகை காணப்பட்டதுடன் அவை வருடாந்த செயலாற்றுகை அறிக்கையின் பிரகாரம் 3379 ஆகும். அதன் பிரகாரம் 297 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2016 ஆண்டின் போது சுஹுரு காட்கள் (புதிய அடையாள அட்டை) அச்சிடுவதற்கான 8 அச்சு இயந்திரங்கள் கொல்வனவு செய்திருந்ததுடன் அந்த அச்சு இயந்திரங்களின் விவரக் குறிப்பு 100 இற்கு நூறு பொலிகாபனேட் காட்கள் அச்சிடக் கூடிய விதமாக தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 35.92 மில்லியன் செலவிடப்பட்டு கொல்வனவு செய்திருந்த காட்கள் நூற்றிற்கு 100 பொலி காபனேட் காட்களாக காணப்படவில்லை. அதன் காரணமாக காட்களில் தனிப்பட்ட தகவல்கள் அச்சிடும் போது உரிய நியமத்தில் அச்சிடப்பட்டிருக்கவில்லை. 2017 அக்தோபர் முதல் திசெம்பர் 31 திகதி வரை அச்சிடப்பட்டிருந்த 132,958 காட்களில் ரூபா 2,289,890 தொகை கிரயத்தையுடைய 31,754 தொகை அதாவது 24 சதவீதம் விரயமாகியிருந்தது. முன்னர் முன் அச்சிடப்பட்ட காட்கள் ஒரே முறையிலன்றி இடையிடையே வழங்கப்பட்டிருந்தது. பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.10(ஈ) இன்

பிரகாரம் செல்லுபடியாகும் செயலாற்றுகை பிணைமுறி இன்றிய விலை மனுதாரருக்கு இந்த ஒப்பந்த வேலை வழங்கப்பட்டிருந்தது.

(இ) முன் அச்சிடப்பட்ட காட்களின் மாதிரி பரிசோதனையின் போது காட்களின் மூலப்பொருளில் அடங்கியுள்ள பெலிகாபனேட் சதவீதம் மற்றும் சர்வதேச நியமங்கள் எனப்படும் ISO/IEC 7810, ISO/IEC 10373, ISO/IEC 24789 என்பவற்றிற்கு இனங்கியிருந்தன என்ற தகவல்கள் எதிர்பார்ப்பதாக செயற்திட்ட பணிப்பாளரினால் காட்டியிருந்த போதிலும், அய்வுகூட அறிக்கையில் காட்களில் அடங்கியுள்ள பொலிகாபனேட் சதவீதம் அறுதியாக குறிப்பிட்டியிருக்கவில்லை. பொலிகாபனேட் இற்கு ஒத்தவை என(Correspond to a polycarbonate) மற்றும் பொலிகாபனேட் தன்மையை காட்டுகின்றது என (Confirms the polycarbonate nature of the sample) மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஈ) திணைக்களத்தினால் காட்டப்பட்டுள்ள செயற்பணி நிருபணமாகும் விதமாக அனைத்து இலங்கைப் பிரஜையினதும் தனிப்பட்ட தகவல்களை சேகரித்து தேசிய ஆளுக்குரிய தகவல்கள் முறைமையொன்று நிறுவப்பட்டு பேணப்படல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) 47,000 பழைய அடையாள அட்டைகள் அச்சிடுவதற்கு போதியளவு விரிப்பு ரோல்கள் மற்றும் insert இருப்பு பயன்படுத்துவதற்காக நடைமுறையொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் இந்த பண்டங்கள் பாதுகாப்பற்ற முறையில் கலஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

**2.5 பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்துதல்**

---

2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டு முன்னைய ஐந்து வருட காலப்பகுதியில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு தொடர்பான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
| --- | --- | --- | --- | --- | --- |
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2016 | மீண்டுவரும் | 633.91 | 626.26 | 7.65 | 1.2 |
| | மூலதன | 88.20 | 87.44 | 0.76 | 0.9 |
| | **மொத்தம்** | **722.11** | **713.70** | **8.41** | **1.2** |
| 2017 | மீண்டுவரும் | 747.52 | 744.98 | 2.53 | 0.3 |
| | மூலதன | 70.70 | 65.20 | 5.50 | 7.8 |
| | **மொத்தம்** | **818.22** | **810.18** | **8.03** | **1.0** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) பாதீட்டு மதிப்பீடு தயாரித்தல்**

முன்வரும் ஆண்டின் செலவிடயங்களுக்காக சரியான முறையில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டமையால் வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட தொகைக்கு அண்மித்த தொகையொன்று அல்லது அதனை விட கூடிய தொகையொன்று 03 வேறு செலவு விடயங்களில் இருந்து 6 சதவீதம் முதல் 63 சதவீதம் மாற்றப்பட சந்தர்பங்கள் அவதானிக்கப்பட்டது.

**(ஆ) ஒதுக்கீட்டு கணக்கு**

**i. ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை பயன்படுத்தாமை**

செலவு விடயம் ஒன்றில் ஒதுக்கியிருந்த ரூபா 200,000 இற்காக மொத்த தேறிய ஏற்பாடுகளில் எதுவும் பயன்படுத்தப்படாமல் முழுவதும் சேமிக்கப்பட்டுள்ளது. அமைச்சினால் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை செயற்திட்டம் கருமங்களுக்காக ரூபா 1000 மில்லியனுக்காக ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அவற்றில் கூட்டுத்தொகை ரூபா 292.28 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வழங்கியிருந்த ஏற்பாடுகளில் ரூபா 707.72 மில்லியன் தொகை அதாவது 71 சதவீத ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன.

**ii. மிகை ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தமை**

---

05 செலவு விடயங்களுக்காக கூட்டுத்தொகை ரூபா 9.85 மில்லியனுக்காக மிகை ஏற்பாடுகள் மேற்கொண்டிருந்தமையால் அந்த செலவு விடயங்கள் தொடர்பான ஏற்பாடுகளில் கூட்டுத்தொகை 4.71 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தியிருந்தமையால் ரூபா 5.14 மில்லியன் தொகை சேமிக்கப்பட்டிருந்தது. அவை ஒதுக்கியிருந்த தேறிய ஏற்பாடுகளில் 7 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சு அளவினை கொண்டிருந்தது.

**iii. குறை நிரப்பு மதிப்பீடு ஒதுக்கத்தின் மூலம் ஏற்பாடுகள் மேற்கொள்ளல்**

---

திணைக்களத்தினால் 2017 கணக்கு ஆண்டிற்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 75,482,000 இற்கான தொகையொன்று ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அது வருடாந்த மதிப்பீட்டு தொகையில் 10 சதவீத தொகையை கொண்டிருந்தது 10 செலவு விடயங்களில் குறை நிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடுகளின் மூலம் பெறல் அந்த செலவு விடயங்களுக்காக ஆரம்ப மதிப்பீட்டு ஏற்பாடுகளில் 8 சதவீதம் முதல் 257 சதவீதம் வரை தொகையொன்று ஒதுக்கப்பட்டிருந்தது.

## 2.6 மதிப்பீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம்

---

திணைக்களத்தினால் 2017 ஆண்டிற்கான வருமான குறியீடு ஒன்றிற்காக கூட்டுத் தொகை ரூபா 240 மில்லியன் இற்கான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது கூட்டுத் தொகை ரூபா 289.79 மில்லியன் வருமானம் ஒன்று சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பீட்டு வருமானத்தில் 21 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது திணைக்களத்தின் முத்திரை வருமானம் திணைக்கள பதிவேடுகள் மற்றும கணிணி முறைமையின் படி ரூபா 371,541 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

## 2.7 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

---

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

---

திணைக்களத்திற்கான 22701 விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால்

விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறை ந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 35.00 | 33.82 | 22.00 | 22.06 | 70.00 | 62.07 |

கணக்காய்விற்கு சமர்பித்திருந்த இணக்க கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் தவிர ரூபா 317,529 தொகையாக காணப்பட்டதுடன், அந்த நிலுவை கடன் மீதி 02 வருடம் முதல் 14 வருடங்கள் வரை கால வீச்சு முதல் காணப்பட்ட போதிலும், அந்த நிலுவை கடன் மீதியை அறவீடு செய்வதற்காக தினைக்களத்திற்கு முடியாதிருந்தது.

## 2.8 இணக்கமின்மை

### 2.8.1 சட்டங்கள்,விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

26/2015 இலக்க மற்றும் 31/2016 இலக்கம் கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக விஷேட முற்பணம் வழங்கியிருந்த 07 சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன் வருட இறுதி அளவில் ரூபா 4,000 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

## 2.9 மனிதவள முகாமைத்துவம்

### 2.9.1 இணைக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்

திணைக்களத்தினால் பணிகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டுள்ள, உள்ளவாறான, வெற்றிட மற்றும் மிகை பதவியணி மீதான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. மீளாய்வாண்டிற்கான திணைக்களத்தினால் ஆளணி வேதனங்கள் செலவின தொகுதிக்காக ரூபா 567.71 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 30 | 23 | 07 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 03 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 1217 | 1012 | 205 |
| (iv) | ஆரம்ப நிலை | 144 | 133 | 11 |
| (v) | அமைய/ஒப்பந்த | 06 | 06 | - |
| | மொத்தம் | 1401 | 1177 | 224 |